


# காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 தை 28 (10-2-74) | இதழ்: 31


★


உள்ளே......

போதையிலில்லை!
(அண்ணாவின் சொற்பொழிவு)

★

ஓலமிடுகிறது, ஒருமைப்பாடு
(தலையங்கம்)

★

வைகைஎன்றேன் நான்!
பொய்கை என்றார் அவர்!!
(இலக்கியம்)

★

உத்தரவாதமில்லாதவள்
(சிறுகதை)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)


★

## வீண்தானா?

(கவிஞர். கானதாசன்)

இலங்கையிலே இரவுபகல் உழைத்த தெல்லாம்
இழிசொல்லும் இழிநிலைமை அடையத் தானா?
விலங்கைநம் கையினிலே பூட்டிக் கொண்டு
வாயில்லாப் பூச்சிகளாய்த் திரும்பத் தானா?

உலகத்தில் உழைப்பவர்கள் உயரா ரென்ற
உரையதனை உறுதிபெறச் செய்யத் தானா?
பலகாலம் பாடுபட்டும் பலனில் லாமல்
பழந்தமிழர் துயரமொடு சேரத் தானா?

காடுகளில் பாடுமிகப் பட்டதெல்லாம்
கானாற்று நீரைப்போல் ஆகத் தானா?
வீடுகளை நாம்கட்டித் தந்த தெல்லாம்
விழலுக்கு நீராகப் போகத் தானா?

நாடுவிட்டு நாடுசென்று செய்த வேலை
நாதியில்லா மக்களைப்போல் வாழத் தானா?
ஓடுஎன்று அங்குள்ளோர் சொல்வ தெல்லாம்
ஒப்பில்லாக் காரியமாய் எண்ணித் தானா?

உருமாறி நிலைமாறிப் போன தெல்லாம்
உலகத்தில் தடுமாறிப் போகத் தானா?
ஒருநாளும் அயர்வின்றிச் செய்த வேலை
ஒப்பற்ற உரிமையெல்லாம் இழக்கத் தானா?

திருநாட்டை விட்டுவிட்டு சென்ற தெல்லாம்
திரும்பிவரும் நிலைமையினை எண்ணித் தானா?
இருநாட்டார் செய்திட்ட ஒப்பந் தங்கள்
இன்னபிற ஏற்பாடும் வீணே தானா?

விலை: 0-25 காசு

# போதையிலில்லை!

"மக்கள் போதையுள்ளவர்கள்; விவரம் அறியாதவர்கள்' என்று காங்கிரசுக்காரர்கள் நினைக்கிறார்கள்! மக்கள், விவரம் அறிந்தவர்கள்; எல்லாம் தெரிந்தவர்கள்' என்று நாம் நினைக்கிறோம்!

"மக்கள், இழந்தவன் பக்கத்தில் சென்றுவிடுபவர்கள்; எந்தப் பக்கத்தில் காற்று அடிக்கிறதோ அங்கு 'சாய்ந்துவிடுபவர்கள்' என்று நம்பிக்கொண்டிருக்கிற அவர்களின் எண்ணத்தை மாற்றும் தேர்தல் இந்த இடைத்தேர்தல்!

"தமிழகத்தில் காங்கிரசைத் தோற்கடித்தது போதையால்தான் என்பதை ஒப்புக்கு வைத்துக் கொண்டு பார்த்தாலும், கேரளத்தில் காங்கிரசு தோற்றதே—எதனால்? பாபு இராசேந்திரபிரசாத் பிறந்த பீகாரில் காங்கிரசுத் தோற்றதே—எதனால்? சுபாஷ் சந்திரபோசைத் தொட்டிலிட்டு வளர்த்த வங்கத்தில் காங்கிரசுத் தோற்றதே — எதனால்? வெள்ளையனின் ஈட்டி முனைக்கு மார்பு காட்டிய லாலா லஜபதி ராய் தோன்றிய பாஞ்சாலத்தில் காங்கிரசுத் தோற்றதே—எதனால்? காங்கிரசாராலேயே உருவாக்கப்பட்ட அரியானா மாநிலத்தில் காங்கிரசு தோல்வி கண்டதே—எதனால்? 'இந்தியாவின் இதயம்' என்றும் 'பண்டித ஜவகர்லால் நேரு—மோதிலால்நேரு-லால்பகதூர்சாஸ்திரி—இந்திராகாந்தி ஆகியோர் தோன்றிய மாநிலம்' என்றும், முன்பொரு காலத்தில் 'சுயராஜ்யத்தின் திறவுகோல்' என்றும் வர்ணிக்கப்பட்ட உத்தரப்பிரதேசத்திலேயே காங்கிரசு தோல்வி கண்டதே—எதனால்?



'என்பேரிலுள்ள கோபத்தினாலே, இந்தியாவின் பெரும் பகுதி மக்கள் குடிபோதையில் உள்ளவர்கள்' என்று பேசுவது? அப்படி ஒரு நாட்டில் காங்கிரசாரின் இருபதாண்டுக் கால ஆட்சிக்குப் பின்னர், எல்லோரும் போதை உள்ளவர்களாக—தெளிவில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்றால், இந்த நாட்டிலேயே காங்கிரசார் இருப்பதற்கு அருகதையற்றவர்கள் என்று பொருள்!

"இப்படி, நாட்டு மக்களை இழிவுபடுத்துகிற எதேச்சாதிகார இயல்பு—அரசியல் ஆணவம் காங்கிரஸ்காரர்களிடம் இன்னும் போகவில்லை என்பதைத்தான் இந்தப் பேச்சு காட்டுகிறது.

'மாபெரும் தேர்தல் நடந்து, அவர்கள் அமர்ந்திருந்த அரசுக் கட்டிலை உருட்டிவிட்ட பிறகும், அடக்கத்துடன் நடந்துகொள்ளும் பண்பு இன்னும் அவர்களுக்கு வரவில்லை என்பதைத்தான் அவர்கள் பேச்சு காட்டுகிறது!'

பொதுத் தேர்தலின்போது கழகத்திற்கு ஆதரவு தந்த நீங்கள், மீண்டும் அந்த ஆதரவைத் தருவதன் மூலம் எங்கள் மீதுள்ள அன்பை நீங்கள் நிலைநாட்ட வேண்டும்!

'புதிய அரசை—அதன் சாதனைகளை நீங்கள் வரவேற்கிறீர்கள்' என்ற உண்மையை இந்தியா முழுமைக்கும் அறிவிக்க இந்த இடைத் தேர்தல் பயன்பட விருக்கிறது!

இது வெறும் இடைத் தேர்தல் அல்ல—புதிய அரசுக்கு ஆதரவும், துணையும் இருப்பதை வெளிக்காட்டும் தேர்தல்!

இந்த இடைத் தேர்தலில் மாறனை வெற்றி பெறச் செய்வதன்மூலம், 'பொதுத் தேர்தல் முடிவு நியாயமான முடிவு; தேவையான முடிவு' என்பதை நிலை நாட்டுகிறீர்கள்!

'இந்தப் புதிய அரசு நடக்கும் பாதை சரியானது; இப்படி அரசு நடத்துவதைத்தான் விரும்புகிறோம்' என்பதை வெளிப்படுத்தும் தேர்தல் இது!

பக்தவத்சலம் அவர்கள் இப்போதெல்லாம் மாலைநேரக் கூட்டங்களில், விசித்திரமான விளக்கங்களைத் தந்து கொண்டிருக்கிறார்; பொதுத் தேர்தலின்போது 138 தி. மு. கழக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதும், 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தி. மு. கழகம் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டதும் ஒரு போதையில் தான்; ஆனால் இப்போது அந்தப் போதை தெளிந்து விட்டது; தி. மு. கழகத்திற்கு மக்கள் ஓட்டுப்போட மாட்டார்கள்' என்று பக்தவத்சலம் கூறியிருக்கிறார்!

அதற்குப் பதில் கூறும் முறையில். 'நாங்கள் முன்பு ஓட்டுப் போட்டது போதையில் அல்ல; விவரம் அறிந்துதான் போட்டிருக்கிறோம்' என்று கூறுகிற முறையில் மக்கள் இந்த இடைத் தேர்தலில் தி. மு. கழகத்திற்கு வாக்களிக்கவேண்டும்.

'மக்கள், போதையில் வாக்களித்தார்கள்' என்று கூறி மக்களை, 'குடிக்காரர்கள் என்று மறைமுகமாக ஏசியவர்களைக் கண்டிக்கும் முறையில் தி. மு. கழகத்திற்கு ஓட்டளிக்க வேண்டும்.

நவம்பர் 7ந் தேதியன்று ஓட்டுச் சாவடிக்குச் சென்று உதயசூரியன் சின்னத்தில் முத்திரையிடும் போது, 'நாங்கள் போதையில் இல்லை' என்று கூறி வாக்களிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்."

★



காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 10—2—74 | இதழ் 31

# ஓலமிடுகிறது, ஒருமைப்பாடு

உரத்த குரலில் ஒருமைப்பாடு பற்றிப் பேசப்படுகின்ற இந்நாளில், உணர்வு அடிப்படையில் சிந்திக்க வேண்டிய சில உண்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

மராட்டிய மாநிலமே, ஒருமைப்பாடு பற்றிய சிந்தனைக்கு நிலைக்களனாக இருக்கும் விந்தைச் செயல்களைக் கண்டு சிந்தை களிக்கின்றது;

வேற்று மாநிலத்தவரை வேதனையின் விளிம்பில் வைத்து வேடிக்கை பார்க்கிறது.

மராட்டிய மண்ணில் மற்றவர்களுக்கு என்ன வேலை என்ற 'மமதை' நிலை அனைவரையும் ஆட்டிப் படைக்கின்றது;

சிந்தனையின் கதவடைத்து சீரழியும் வழி நுழைந்து சிரிக்கின்ற 'சிவசேனை' செழிக்கின்ற நிலை எங்கும்!

வழிதவறி நடக்கும் 'சேனைக்'கோ, ஒருமைப்பாட்டு வாரிசுகளின் வாழ்த்தும் அரவணைப்பும் உண்டென்று உரைக்கின்றனர்; உண்மையை யார் அறிவார்?

பம்பாய் மாநகரில் பைந்தமிழர் பந்தாடப்படுகின்றனர்; அவர்தம் கடைகள் அடித்து நொறுக்கப்படுகின்றன. பொருள்கள் சூறையாடப்படுகின்றன.

தமிழர் மட்டுமல்லர்; பிற மாநிலத்தார் அனைவருக்கும் இதே "பெருந்தன்மை"ப் பரிசுகள்தாம்! ஆம்! ஒருமைப்பாட்டின் 'உண்மைப் பொருள்' இதன் மூலம் உணர்த்தப்படுகிறது, உலகத்துக்கு!

பிற மாநிலத்தவர் உடமைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டும் எனப் பலரும் மராட்டிய முதல்வருக்கு உணர்த்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

தமிழக முதல்வர் மாண்புமிகு **கலைஞர்** அவர்களும் கடித வாயிலாக இக்கருத்தினைத் தெரிவித்துள்ளார். கேரள முதல்வரும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா அம்மையாரும் கூட, மராட்டிய முதல்வருக்குச் செய்தி அனுப்பியுள்ளார்.

ஆனாலும், 'சிவசேனை'யின் ரத்த நாக்குகள் உலர்ந்தபாடில்லை; செந்தமிழர் வாழ்வுக்கும் உத்தரவாதமில்லை.

ஒருமைப்பாட்டு உறுதிமொழிகளுக்குப் பஞ்சமில்லை; ஒற்றுமை வேதம் ஓதுவதில் குறைவே இல்லை. இருப்பினும், பிற மாநிலத்தவரின் உயிருக்கும் உடமைக்கும் தக்க பாதுகாப்பில்லை, மராட்டிய மண்ணில்.

இந்நிலையில், ஓலமிடுகிறது ஒருமைப்பாடு! தாளம் போடுகிறது மராட்டிய அரசு.

'சிவசேனை' கிடக்கட்டும்! அதற்கு மறைமுகமாகப் 'பால்' வார்க்கும் 'புது'ச் சேனை என்ன சொல்கிறது?

இதே நிலை பிற மாநிலத்திலும் தொடருமானால், 'இந்திய ஒருமைப்பாடு' என்னாவது?

'சிவசேனை' நெருப்பில் குளிர் காய்பவர்களே!

இச்சிந்தனைக்கும் ஒரு சேனை அமையுமானால்,.........

........சிந்திக்க வேண்டாமா?

ஒருமைப்பாட்டில் உள்ள நம்பிக்கையின் அடிப்படையில்தான் நமது பாதை அமைகின்றது; நமது அரசும் நடைபோடுகிறது.

ஆனாலும் அஃது ஒரு வழிப்பாதை அல்லவே!

—மணிவேந்தன்

## ஏமாற்றம்!

**(மணிவேந்தன்)**

இன்பக் கொள்கலம் வாழ்க்கை என்றே
எண்ணி யிருந்தேன் ஏமாற்றம்—நல்
அன்புக் கொள்கை வெல்லும் என்றே
அடித்துச் சொன்னேன் ஏமாற்றம்!

பட்ட பாட்டின் பலனுக் காகப்
பார்த்துக் கிடந்தேன் ஏமாற்றம்—உயர்
கட்டுப் பாடு குலையா தென்றே
கருதி யிருந்தேன் ஏமாற்றம்!

நல்ல 'துணை'யை அடைவேன் என்றே
நாளும் நினைத்தேன் ஏமாற்றம்—ஆம்,
வெல்லும் வாய்மை என்றே நினைத்து
விடிய உழைத்தேன் ஏமாற்றம்!

உள்ளம் அமைதித் தென்ற லாக
உலவ நினைத்தேன் ஏமாற்றம்—சீச்சி!
கள்ளம் நிறைந்த கயமை சிரிக்க
கலங்கும் நெஞ்சில் ஏமாற்றம்!

ஏமாற் றத்தால் நலியும் போதோ
எத்தன் பார்த்துச் சிரிக்கின்றான்!—நான்
எங்கே அமைதி என்றே ஏங்கி
இதயம் கனக்க அழுகின்றேன்!

# வைகை என்றேன் நான்! பொய்கை என்றார் அவர்!!

— ந. இறைவன், பி. ஏ.

என்னடி தோழி உன் தலைவன் வந்தானா? வந்தவன் கனியிதழில் ஏதேனும் தந்தானா? தந்தவன் கனியிதழில் ஏதேனும் உண்டானா?

ஏன் தலைவி! இவையெல்லாம்! உன் தலைவன் வந்தானா? வந்தவன் கனியிதழில் ஏதேனும் தந்தானா? உண்டானா? என்று என்னை நீங்கள் கேட்கவும்; இல்லையே தலைவியென நான் சொல்லவும்; சொல்லிய பின் உன் தலைவன் வந்தானா என்று நான் கேட்கவும்; வந்தான் என்பதை வாய்மொழியால் சொல்லாமல் வாள்விழியால் காட்டவும்; கண்ணல்ல என் தலைவி நீயென்று நான் கொஞ்சியபின், வந்தவன் கனியிதழில் என்னென்னவெல்லாம் எடுத்தெடுத்து உண்டான் என வினவ; நீயதற்கு, அவன் எனக்குக் கனியிதழில் தந்தனவும் உண்டனவும், நான் உனக்குக் கன்னித் தமிழ் குழைத்துத் தரத்தாண்டி வந்தேன் என உரைக்கக் கேட்ட நான், மெள்ள ஊடி; அவன் உனக்குத் தந்ததைத்தான் தீந்தமிழில் தருவாயோ? நீ அவனுக்குத் தந்ததையும், தந்த முறையினையும் அழகு தமிழ் குழைத்துத் தரமாட்டாயோ என வினவி நிற்க! இல்லையடி இல்லை! அதையுந்தாண்டி உனக்கு தரப்போகிறேன் எனச் சொல்ல! அப்படியானால் விரைவாகச் சொல்லுங்கள் என்று நான் வேண்ட, பின்னர்தான் நீ நிகழ்ந்ததைச் சொல்ல வேண்டுமா?

இவையெல்லாம் விடுத்து, அவன் வந்தான் என்று தொடங்கி, அவன் சென்றான் என்று முடிக்கும் வரை என் பேச்சை நடு நடுவே இழுக்காமல் அவன் படைத்த காதல் இலக்கியத்தை நீ படைக்க வேண்டுகிறேன். வாயில்லாப் பூச்சியாகி நின் காதல் காவியத்தால் செவியின்பம் பெறவும் நினைக்கின்றேன்.

நின் ஆணைக்குத் தலைதாழ்த்திச் சொல்கிறேன் கேளடி! முல்லைக்கொடி முகிழ்த்த நறும் அரும்பின் முறுவலினைத் தன் குறுநகையால் வெற்றி கொள்ளும் கிள்ளைமொழிக் கன்னியர்கள் வாய்மணக்கப் புகழ் பாடும் அவர் வருகையை; மின்பூத்த வானை அழகு செய்யவரும் ஒளிபூத்த தண்ணிலவில் கண்பூத்துப் போகும்வரை பார்த்திருந்தேன்!

தனிமையிலா தலைவி!

இல்லையடி இல்லை! நான் மட்டும் காத்திருக்கவில்லை! மலர் பூத்து மணம் பூத்த காவினிலே அழகோடு அகம் பூத்த கன்னியர்கள் ஆங்காங்கே நடைபயின்று; வீர ஒளி பூத்த காதலர்தம் முகத்தோடு முகம் பூத்தும், அகத்தோடு அகம் பூத்தும் சிரிப்பதற்குக் காத்துக் கிடந்தனர்.

மின்பூத்த வானை மேற்பார்வையிடும் நிலவினைப் போல் பூவோடும் மணத்தோடும் கன்னியரும் பூத்திருந்த காவினிலே காதலர்கள் நுழைவார்கள். இடையை அணைத்து எழில் கொஞ்ச நடப்பார்கள். நானோ என் துணைஇன்றி ஏங்கிக் கிடப்பேன்.

நெடுநேரம் சென்றதன்பின் அடலேறு அவர் வந்தார்! ஊட நினைத்து இமையை மூடி நடந்தேன்! வரும்வரை திட்டிய வாய், வருக வருகவென வாழ்த்துரைக்கத் துடிக்கும். வரும்வரை வாடிய இதழ்கள் வந்ததும் தாவென அவரைக் கேட்கத் துடிக்கும்.

வந்தவர் கண்ணல்ல நீ என்றார்! நானோ கண்ணிமையைத் திறவாமல் நின்றேன்!

வண்ணக் குழம்பெடுத்து எண்ணத்தில் மிதந்து வரும் பண்பாடும் யாழே படைக்கவோ உனை என்றார்!

கிண்ணத்தின் வண்ணத்தை மண்ணிலே சாய்த்துவிட்டு, வண்ணத்தால் படைத்தால் நான் வாழேன் நெடுநாளென்று, என் எண்ணத்தின் வண்ணத்தால் எனை எழுது என்பாள்போல் நின்றேன் நான்.

எண்ணமெனும் வண்ணத்தை இதயமெனும் கிண்ணத்தில் வற்றாத கடலாக்கி வடிவழகே உன்னை நான் வடிக்கவோ எனக் கேட்டார்.

'இம்' என்பாள்போல் இதழ் நெளியும் சிரிப்பொன்றைத் தந்தேன்! வடிவழகன் நெடுநேரம் என் வாள்விழியைப் பார்த்திருந்தார். வாள்விழியே! வடிவழகே! தான் பார்க்கும் நின் வாள்விழிக்கு என் தோளென்றால் தேனாமோ எனக் கேட்டார்.

இல்லை என்றேன். ஏனென்று கேட்பார் என நினைந்தேன். ஏனென்று கேளாமல்; தேனிற்கும் மேலான என் தோளைத் தேனென்றால் நீ ஒப்புவையோ எனக் கேட்டுச் சிரித்தார்.

ஆம் என்பாள்போல் அவர் சிரிப்பிற்கு நானோர் பதில் சிரிப்புச் சிரித்தேன்.

தோள்விழியே என்றழைத்தார் என்னை. என்ன தோள்விழியா என்று இடைமறித்தேன் அவரை! ஆம் தோள்விழிதான்; என்றார் விளக்கம் தந்து.

என்ன விளக்கம் தந்தார் தோழி!

கோதையர்கள் விழியின் வடிவங் கொண்டு அதனை வாள்விழி என்றார்கள் கவிஞர்கள். இதன் தொழில் கொண்டு நானிதனைத் தோள்விழி என்கின்றேன் என்றாரவர் என் விழியைக் காட்டி.

போதும் போதும் உங்கள் புதுமை விளக்கங்கள். கூடலின் பெருமையைப் பற்றிச் சொல்கின்றேன், சொல்கின்றேன் என்று பல நாட்களாக ஏமாற்றி வருகிறீர்களே......அதை இன்றேனும்.........என்று நிறுத்தினேன்.

அதற்கு அவர், கூடல் இன்பத்தைக் கவிதையிலே வடியுங்கள் வடியுங்கள் என வேண்டி, வடித்து வந்த கவிதைகளை என் முன் படியுங்கள் படியுங்கள் என்பாயே! நீ விரும்பி விரும்பி வேண்டிய அந்தக் கூடலின்பத்தின் பெருமையைத் தனிமையில்எண்ணி எண்ணி இன்பம் தரும் சொல்பலவும் சேர்த்துச் சேர்த்துக் கவிதையாக்கி வந்தேன் உன்னிடம் சுவை சொட்டச் சொட்டச் சொல்லவேண்டும் என்ற நினைவோடு. நீயோ ஊடிக் கிடக்கின்றாய். கூடலின்பம் வேண்டாம் என்பாள் போல். உன் ஊடலினைப் பார்த்ததும், கூடல் இன்பத்தைத் தேடிவந்த என் கண்களும்; ஓடிவந்த கால்களும் நாடிவந்த கைகளும் பாடிவந்த நெஞ்சும் வாடிக்கிடக்கின்றன. வண்ணக் கவிதையும் மறந்தே போயின என முடித்தார்.



ஊடலுமில்லை ஒன்றுமில்லை. நீங்கள் சொல்லுங்கள் கூடலின் பெருமையைப் பற்றி என்று நெருங்கினேன்.

ஊடல் இல்லை என்று சொல்லிவிட்டால் போதுமா? ஒரு அடி இடைவெளி நமக்குள்ளே இருத்தல் தகுமா? நெருக்கத்தை குறை நீ! நிகழ்ச்சியைத் தொடர்கின்றேன் நான் என்றார்.

இன்னும் அருகில்போய் அமர்ந்தேன். இது போதாது என்று சொல்லித், தென்றலும் இடைபுகாதவாறு நெருக்கம் அதிகமானால் அன்றோ, ஒன்றன்றோ இவ்வுடல்கள் என்றெண்ணி ஓடிவரும் தென்றலும் ஒதுங்கி நடைபயிலும் என்றார் சிரிக்காமல் இமைக்காமல்!

பிறகு என்ன செய்தாரோ?

அத்தனையும் சொல்லவேண்டுமோ தோழி?

அத்தனையும் சொல்லவேண்டுமா என்று கேள்வி வேறா? எள் நுனியளவும் குறைக்காமல் சொல்ல வேண்டும்.

கள்வராயிற்றே நீங்கள் என்றேன் சிரித்தபடி! கள்ளியாயிற்றே நீ என்றார் அணைத்தபடி! வீரத்தின் விளைநிலமே இது என்றேன் அவர் முகத்தைப் பார்த்தபடி! விலையில்லாக் கலையின் விளைநிலமே இது என்றார் என் முகத்தைப் பார்த்தபடி! குன்றன்றோ இது என்றேன் அவர் மார்பில் தவழ்ந்தபடி! கொடியன்றோ இது என்றார் என் இடையை வளைத்தபடி! கரும்பன்றோ இது என்றேன் அவர் இதழைத் தொட்டபடி! கனியன்றோ இது என்றார் என் இதழை சுவைத்தபடி! ஓவியந்தான் நம் நிலை என்றேன் நான் அவர் தந்தவற்றை உண்டபடி! காவியமே நம் வாழ்வு என்றார் அவர் நான் தந்ததை உண்டபடி!

நெடுநேரம் சென்றதன் பின்; காளை கலை பயின்ற களை தெளிந்து நிலையுணர்ந்தோம், அவரை நெஞ்சோடு அணைத்து; கூடலின் பெருமையைச் சொல்லப் போகிறீர்களா? இல்லை நான் இங்கிருந்து போக விடைதருகிறீர்களா எனச் சினத்தோடு வினவினேன்.

அதற்குள் ஊடலா? விடு விடு! ஊடலின் நினைவை விடு! கூடலின் பெருமையைக் கேளென்று சொல்லிக் கூடலுக்குச் சிறப்பு வைகை என்பார் பெண்கள்! கூடலுக்கு சிறப்பு பொய்கை என்பார் ஆண்கள்" என்றார்,

கூடலின்பத்தின் பெருமையைச் சொல்லுங்கள் என்றால் கூடல் நகரின் பெருமையைப் பற்றிச் சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்கின்றீர்களோ எனக் கோபங்கொண்டேன் நான்.

கூடலின் சிறப்பினைப் பற்றித்தான் நான் சொன்னேன், நீ எப்படி அதைக் கூடல் நகரின் சிறப்பென்றாய் என்று என்னையே கேட்டார் அவர்.

கொத்து மலர் கொடிகள் தூவிய மலரினையும்; தித்திக்கும் கனிகொண்ட மரங்கள் உதிர்த்த் கனிகளையும் வாரிவரும் வைகை நதி கூடல் நகர் அருகே வருவதால்தான் மதுரைக்குச் சிறப்பு என்பார் பெண்கள் என்பதைத்தான் நீங்கள் "கூடலுக்கு சிறப்பு வைகை என்பார்கள் பெண்கள் என்றீர்கள்' என்றேன்.

பொய்கை என்பதற்கு என்ன விளக்கமோ என்றார் அவர்

அறம் வாழத் தன் மெய் கையை இழந்து பொய்க் கையாய் பொன் கையைப் பெற்ற 'பொற்

கைப் பாண்டியனின்' வரலாற்றுச் சிறப்பால்தான் மதுரைக்கு சிறப்பு என்பதனைத்தான் நீங்கள் "கூடலுக்குச் சிறப்பு பொய்கைதான் என்பார்கள் ஆண்கள்" என்றீர்கள் என்றேன் நான்.

நான் கூடலின்பத்தின் பெருமையைத்தான் சொன்னேன் என்றார் அவர் மீண்டும்.

பொய்! பொய்! ஏமாற்றப் பார்க்கிறீர்கள் என்றேன் நான். மெய்! மெய்! நான் சொன்னது மெய்யே என்று சொல்லி விளக்கம் தந்தார்.

நான் முதல் முதலிலே சந்தித்தபோது......நீ என்னைப் பார்த்துப் பேச நாணி; முகத்திலே கைவைத்துக் கண்களை மூடிக் கொண்டதும்; பார்க்கத் துடிக்கும் கண்களைப் பாவையே நீ ஏன் கைகொண்டு மூடுகிறாய் எனக் கேட்டு அருகே வந்து கையை விலக்கவிட்டு; நமக்குள் எதற்கு இந்த நாணமெல்லாம் என்று நான் கேட்க; நீ நாணிக் கோணி நெளிந்து குழைந்து; போங்கள் அத்தான், ஒரே வெட்கமாக இருக்கிறது என்று குழந்தைபோல் குழைந்து, கடைக்கண்ணால் எனைப் பார்க்க, மீண்டும் நாணம் நினைச் சூழ; மீண்டும் நீ கைவைத்து முகம் மூட: நான் அதனை விலக்க முயன்று முடியாமல் போக; நான் நின் பொல்லாத கைகளைத் தூற்றி விலகிவிட்டேனே நினைவிருக்கிறதா? என்றார் அவர்.

நன்றாக நினைவிருக்கிறதே என்றேன் நான்.

பெண்களுக்குச் சிறப்பு நாணம். நாணம் இல்லை என்றால் ஊடலுமில்லை கூடலுமில்லை. நாணம் வரும்போது காதலி காதலனைப் பார்க்க நாணித் தன் முகத்தைக் கை வைத்து மறைத்துக் கொள்வாள். முகத்திலே வைக்கின்ற கைகளை அகற்றுவதற்கு ஆண்கள் படும்பாட்டிலேதான் கூடலின் இன்பம் இருக்கிறது என்பார்கள் பெண்கள் என்பதை நான் இலக்கியத்தில் படித்த நினைவு வந்தது. அந்த நினைவு என் உள்ளத் திரையில் தோன்றவே தான் மீண்டும் ஓடிவந்தேன். உன் கைகளை விலக்கினேன். நாம் கூடல் இன்பத்தைப் பெற்றோம் இல்லையா என்றேன்.

நாணத்தைக் காட்ட முகத்திலே வைக்கின்ற கையை ஆண்கள் விலக்கப் படும்பாடுதான் கூடலின் சிறப்பாகக் கொள்வார்கள் பெண்கள் என்பதைதான் நான் "கூடலுக்கு சிறப்பு 'வை' 'கை' என்பர் பெண்கள்" என்றேன் என்றார்.

கூடலின் சிறப்பு பொய்கை என்பர் ஆண்கள் என்றீர்களே, அதற்கென்ன பொருளாம் என்றேன் நான்.

நாணத்தால் முகத்திலே வைத்த கைகள் காதலனைக் காணவேண்டும் என்ற ஆசைக்கு அடிமையாக்கித் திருட்டுத்தனமாகக் காதலனைப் பார்க்க வழிசெய்யும். மெய்யாகவே அவள் முகத்திலே கை இருந்தாலும் விரல் இடுக்குகள் அவள் கையை 'பொய்' கையாக்கிக் காதலனைப் பார்க்கவழி செய்யும். வைகை இங்கே பொய்கையாக மாறுகிறது. ஆசை வைகையை பொய் கையாக மாற்றுகிறது. ஆசை வை கையைப் பொய் , கையாக மாற்றி விடுவதால் கூடலின்பம் பெருகுகிறது. பொய்கை கூடலின்பத்தைப் பெருக்க உதவுவதால்தான் 'ஆண்கள் கூடலுக்குச் சிறப்பு பொய்கை என்பார்கள்' என்றேன் நான் என்றார்.

எடுத்தெனை ஆள்க என்றே இயம்பிடும் சொற்கள் தம்மை; வகுத்தே நான் ஆள்வேன் என்று வரிசையில் நிறுத்தி வைத்து; வான் மழை பொழிவதேபோல், தேன்கூடு தமிழில் கட்டும் தென்றலவர் அடிபணிந்தேன்.

கூடல் நகரின் பெருமையையே கூடலுக்கும் பெருமையாக்கிய உங்களுக்கும் நான் என்றும் அடிமை என்றேன்.

அதைவிடு; இப்பொழுது சொல் கூடலுக்குப் பெருமை எது? என்று கேட்டார்.

முகத்தை மூடியபடி 'கூடலுக்குச் சிறப்பு வைகை என்றேன் நான்! என் கன்னத்தைத் திருகியபடி கைகளை விலக்கியபடி "கூடலுக்குச் சிறப்பு இந்தப் பொய் கை என்றார் அவர்"

இப்படியெல்லாம் அறிவுத் திறம்படைத்த அந்த அழகுத் தலைவனைத் தாண்டி; நான் பார்க்கக் கூடாது என்று என் தாய் ஆணையிட்டு, அறைக்குள்ளே போட்டுப் பூட்டி விடுகிறாள் அவர் நகர் வலம் வரும் நேரம் பார்த்து.

என்ன கொடுமை தலைவி இது!

உனக்கும் எனக்கும்தாண்டி கொடுமையாகத் தெரிகிறது! என் தாய்க்கு அதுதானே மகிழ்ச்சியைத் தருகிறது.

ஒருநாள் மாலை அவர் நகர் வலம் வருகின்றார் என்பதை அவர் தேரின் ஒலி கேட்டுத் தெரிந்து கொண்டேன் நான். பார்க்காவிட்டால் என் உயிர் பிரிந்துவிடும் போலிருந்தது! அறையின் எல்லாப் பக்கங்களிலும் ஓடி ஓடித் தேடியலைந்தேன்!

கிடைத்ததா தலைவி வழி!

கிடைக்காமலா தோழி போகும்!

பூட்டிய அறையுள்ளும் வழியிருந்ததா? தலைவனைப் பார்த்தீர்களா என்ன வழியது! தயை செய்து சொல்லுங்கள் தலைவி!

என்னடி தோழி உனக்குமா இந்த வழி தேவைப்படுகிறது?

ஆம் தலைவி! என் தாயும் உன் தாயைப் பின்பற்றுகிறாள் இப்பொழுதெல்லாம்!

நான் சொல்லுமுன் என் தாய் எங்கே இருக்கிறாள் என்று பார்! நான் சொல்லுகின்றபோது அவள் காதில் விழுந்தால் இந்த வழியும் அடைபட்டுவிடும்!

அவள் உள்ளே இருக்கிறாள் சொல்லுங்கள் தலைவி!

கதவு இருக்கிறதே தோழி! அந்தக் கதவில் பூட்டுத் துளையிருக்கிறதே அந்த துளை வழியாகப் பார்த்தேன்! யாரிடமும் சொல்லிவிடாதே! போ! போ! நாளை முதல் உன் தலைவனைப் பார்ப்பதற்கும் நான்கண்ட வழியில் நீ சென்று மகிழ்! முதலிலே கதவினைச் செய்த தச்சனுக்கு நன்றியை சொல்லிக் கொள்! அவன் செய்த இந்த அறம்வாழி! நீடூழி!

என்ன அதற்குள் பிரிந்துவிட்டார்களே என்று வருந்தாதீர்கள்! இதோ அவர்கள் அடக்கிவைத்திருக்கும் முத்தொள்ளாயிரம் எனும் வைர மணிப் பேழை! திறவுங்கள் அதனுள்ளே இதுபோன்ற தலைவியர்கள் பலருண்டு கண்டு களியுங்கள்,

**"காப்படங்கென்று அன்னை கடிமனையில் செறித்து**
**யாப்படங்க ஓடி அடைத்தபின்—மாக்கடுங்கோன்**
**நன்னலம் காணக் கதவம் துளைதொட்டார்க்கு**
**என்னகொல் கைமாறு இனி."**

—முத்தொள்ளாயிரம்.

# அண்ணாவின் பாதையிலே!

அண்ணா மறைந்து விட்டார்! ஆனால் அவர் விட்டுச் சென்ற பணிகள் ஏராளம் உள்ளன;

அவர் ஒரு சாதாரண மனிதரல்ல. மறைந்தவுடன் அவரது சரித்திரம் முடிவதற்கு.

அவர் ஒரு காலக்குறி! வரலாற்றில் திருப்புமுனை!

அவர் தனது வாழ்நாளில் சொன்னது—சொல்ல மறந்தது நிறைய இருக்கிறது.

அவர் சொன்னது ஏடுகளில் இருக்கலாம்!

சொல்ல மறந்தது. அவரது இதயத்துடனேயே இருந்து அவருடனே புதைந்து போயிற்று,

அந்தப் புதைந்துபோன எண்ணங்களை நாம் கண்டுபிடித்தாக வேண்டும்.

அவர் இருந்தால் தனது எண்ணங்களைப் படிப் படியாகச் செயலாக்கியே தீருவர்; அதற்கான பயிற்சியும் பக்குவமும் நிரம்பப் பெற்றவர் அவர்.

அவர் நடந்து வந்த பாதையிலே, அவரது அடியொற்றியே நாமெல்லாம் வந்திருக்கிறோம்.

நம்மில் பலருக்கு அவரைத் தெரியும். ஆனால் சிலருக்குத்தான் புரியும்!

தெரிவதற்கும், புரிவதற்கும் நிறைய வித்தியாசமுண்டு.

அண்ணாவைத் தெரியாதவர்கள் தமிழ் நாட்டில் யாருமே இல்லை; ஆனால் அவரைப் புரியாதவர்கள் நிறையப்பேருண்டு.

அவரைப் புரிந்து கொண்டவர்கள், புரியாதவர்களுக்குப் புரியவைப்பதுதான் இனி நடைபெற வேண்டிய பணியாகும்.

அண்ணாவின் சிந்தனைப்போக்கு எவ்வாறிருந்தது என்பதைத் தொடர்ந்து ஆராய வேண்டியது அவரைப் பின்பற்றி வந்த எல்லோரது கடமையாகும் அப்போதுதான் அண்ணாவின் பாதை நமக்குப் புலப்படும்.

'அண்ணாதுரை என்ன சாதித்து விட்டார்?'

'அண்ணாவின் பாதையில் நடப்போம், என்கிறீர்களே அப்படியென்றால் என்ன?'

அவரது முதல் கேள்விக்குப் பதில் பெருந் தலைவர்கள் உள்ளிட்ட நாலரைக்கோடி தமிழ் மக்களுக்கும் காலம் வகுத்த பாதை அண்ணாவின் பாதையே. இன்றில்லாவிட்டாலும் ஒருநாள் நிச்சயமாக எல்லோரும் அந்தப் பாதைக்கு வந்தே தீரவேண்டும்.

வாடுகின்ற மக்களின் வறுமையகற்ற வந்த வேந்தன்.

காடு கமழும் கற்பூரச் சொற்கோ.

ஏடும் நாடும் ஏந்துகின்ற பேரறிஞன்.

பன்னரும் கலைகள் பயின்ற நற் புலவன்.

தன்னலங் கருதாத் தென்னவர் தலைவன்.

அந்த அண்ணனின் நீங்காத நினைவு அவர் தம் பாதையில் நம்மை வழி நடத்துமாக!

அண்ணன் புகழ் வாழ்க!

("பூமாலை" என்னும் இலங்கை இதழில் வெளிவந்த கட்டுரை.)

# இதயத்துடிப்பே! எழுந்தருளாயே!

(கவிஞர். பல்லவன்)

கண்ணின் மணியில் கொலுவிருந் தாயே!
காந்தப் பேச்சால் மனங்கவர்ந் தாயே!
மண்ணில் மயங்கி உறங்குகின் றாயே!
மாமணியே! பள்ளி எழுந்தரு ளாயே!

செந்தமிழ் நாடெனப் பெயரிட் டாயே!
சிந்தனைப் பெரியார் துணைகொண் டாயே!
இந்திக் கிடந்தர மறுத்துவிட் டாயே!
இதயத் துடிப்பே! எழுச்சிகொள் வாயே!

வேய்ங்குழல் மொழிக்கு விழாவெடுத் தாயே!
விருந்துல கத்தை வியக்கவைத் தாயே!
தாய்க்குத் தலைமுடி சூட்டிவிட் டாயே!
தாமரைப் பூவே! மலர்ச்சிகொள் வாயே!

சித்திரப் பூப்போல் சிரித்திருந் தாயே!
சீர்தமிழ் காக்கச் சிறைபுகுந் தாயே!
நித்திரை இன்றி நீயுழைத் தாயே!
நெஞ்சோ வியமே! துயில்நீப் பாயே!

எங்களை உயர்த்த ஏணியா னாயே!
எதையும் தாங்கும் இதயங்கொண் டாயே!
தங்க உடலை நோய்க்களித் தாயே!
சங்கத் தமிழமே! விழிதிறப் பாயே!

பாச உணர்வைப் பயிர்செய் தாயே!
பண்பு நதியெனப் பாய்ந்துவந் தாயே!
ஆசைத் தம்பியர் அழப்பிரிந் தாயே!
அறிஞர் அண்ணாவே! கண்மலர் வாயே!

எதிரியின் தோட்ட மலர்மதித் தாயே!
ஏழையின் சிரிப்பில் இறைதுதித் தாயே!
விதியை முறித்து மதிவளர்த் தாயே!
விடியற் பொழுதே! விழித்தெழு வாயே!

இருட்டறி யாமையை விரட்டிநின் றாயே!
ஏட்டமு தத்தை ஊட்டிச்சென் றாயே!
குருட்டுத் தனத்தைக் குழிபுதைத் தாயே!
குறளுருவே! பள்ளி எழுந்தரு ளாயே!

கலங்க வைத்தே கதைமுடித் தாயே!
கண்ணீர்க் கவிதைப் பொழியவைத் தாயே!
கலைஞர்க்(கு) உளத்தைக் கடன்கொடுத் தாயே!
காஞ்சித் தலைவா! கண்விழிப் பாயே!

சந்தனப் பேழையில் பள்ளிகொண் டாயே!
சரித்திரப் புகழை அள்ளிக்கொண்டாயே!
வந்தனை செய்தோம் வரந்தரு வாயே!
வாழும் தமிழே! நியெழு வாயே!

சென்ற இதழ் தொடர்ச்சி

# உத்தரவாதமில்லாதவள்

— கஸ்தூரி நடராசன்

ஊடினோம் கூடினோம் குலவினோம் கொண்டாடினோம் எங்கள் "காதலை" தினந்தோறும், "இரவு இறைவனால் அளிக்கப்பட்ட வரப் பிரசாதம் என்ற நினைப்பில் அல்ல திகைப்பில் இருந்தோம்—இரவை விரட்ட நினைக்கும் விளக்கு—அதை விலக்க முடிவெடுத்து விடைகொடுத்தனுப்பி விடுவோம். எழுத்தாளன் தான் எழுதிய நாடகத்தை மேடையில் காணும்போது—தன் மன எழுச்சிகளை குறிப்பிட்ட பாத்திரங்கள்—சுவைகளையும் நயங்களையும் வெளியிடுகின்றனவா என்பதை மேடையில் காணுகின்ற வாய்ப்பை மட்டுமே பெறமுடியும். ஆனால் நாங்களோ இருட்டில் அமைக்கப்பட்ட எங்கள் மஞ்ச மேடையில் இரவு நாடகத்தைத் தொடங்குவோம்-அந்த நாடகத்திற்கு நான்தான் கதாநாயகன்—அவள் என் காதல் நாயகி. எங்கள் இருவர் உள்ளங்களில் அவ்வப்போது தொடங்கிவிடும் உணர்ச்சி மயமான உறையாடல்கள்—கேள்விகள்—கேள்விகளுக்கு விடைகள் உணர்ச்சியில் உச்சகட்டத்தில் வேகமாக நடிப்போம். அதில் காதல்தான் முதலிடம் பெறும், சில்லறைச் சோகங்கள் இல்லாமல் இருக்காது. கலந்துறையாடும் இதய கீதத்திற்கு அவளின் கைவளையல்கள் இனிமையான மெட்டமைத்துக் காட்டும்—இயற்கை எங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் சென்றுவிடும்—காமுகன் நிலையில் நான், அதை முறைப் படுத்தி செயல் வடிவம் தந்திட ஒத்துழைக்கும் காதலியின் நிலையில் அவள்—இன்பம் முறையாக அறங்கேற்றம் பெறும். நாங்களே எழுதிய நாடகம். நாங்களே நடிக்கும் நாடகம், நாங்களே ரசிக்கும் நாடகம், அதுமட்டுமா இடைவேளையே இல்லாத நாடகம் ஆனால் நிச்சயமாக ஓரங்கு நாடகமில்லை. அது ஒரு பெரும் தொடர் நாடகமுங்கூட. எப்போதோ, வேலைவேண்டும் என்று எழுதிப் போட்ட மனுவுக்கு பதில் கிடைத்தது. சிதம்பரத்தில் வேலையாம். என்ன செய்வது, எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு என்னை எழும்பூர் ரயில் நிலையத்திற்கு மேளதாளமில்லாமல் — —மற்ற உபசரணைகளுடன் கிதம்பரம் செல்ல இருந்த ரயிலில் உட்காரவைத்து விட்டார்கள்—அவர்களுக்கு மகிழ்ச்சி. ஆனால் எனக்கு—அமுதாவின் முகம் என் நெஞ்சத்தில் நிழலாடிக் கொண்டிருக்கிறது—கடைசியாகச் சந்தித்த போது— "மீண்டும் விரைவில் வந்து உன்னை சந்திப்பேன்" என்ற வாசகங்களை அவள் நெஞ்சத்தில் பதியவைத்து— அதற்கடையாளமாக முத்திரையும் வைத்து விட்டு வந்தேன் அவளின் கன்னத்தில்—அந்தக் கன்னத்தில்தான் எத்தனை கதகதப்பு— உள்ளம் குமுறுகிறது. குத்தாமல் குத்துகிறது. அவளின் எண்ணம் என்னை கொல்லாமல் கொல்லுகிறது "உடம்பை ஜாக்ரதையாக பார்த்துக்கோ" அம்மாவின் அன்பு உபசரிப்பு—உடம்பை நான் பார்த்துக் கொள்ளத்தயார் உள்ளத்தை யார்பார்த்துக்கொள்வது — இது அம்மாவுக்குப் புரியுமா — ஆகவேதான் ஒட்டு மொத்தமாக "சரியம்மா" என்றேன். என் நெஞ்சத்து நிலைமைகளைப் புரிந்து கொண்டு விட்டது போலும். ரயில்-ஓவென்ற இரைச்சலை எனக்குப் பதிலாக அதுவாரி இறைத்து விட்டு முக்கிமுணகி சிதம்பரம் நோக்கிப் புறப்பட்டது.

ரயில் செங்கல்பட்டை அடைந்தது. சென்னையை விட்டு — ஆனால் என் எண்ணம் மட்டும் சென்னையிலேயேதான் இருக்கின்றது. திண்டிவனம் விழுப்புரம் இப்படி மாறிமாறி ஜங்ஷன்களைத் தாண்டிக் கொண்டிருக்கின்றது ரயில். ஆனால் என் இதயம்மட்டும் சென்னை மெரினா கடற்கரையில் அங்குதான் அவளைக் கடைசியாகச் சந்தித்த இடம் அங்கேயே தான் இருந்தது.

உடல் அளவில் சிதம்பரம் வந்தடைந்தேன். மேலண்டைத்தேரடி வீதி அங்குதான் அக்காள் வீடு—என்னைக் கண்டதும் அக்காள் சரோஜாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. நீண்ட நாட்களுக்குப் பிறகு—அதுவும் எனக்கு வேலை அங்கேதான்-அக்காளின் சந்தோஷத்திற்கு கேட்கவாவேண்டும். முகமெல்லாம் மகிழ்ச்சி வாயெல்லாம் பல்—அளவில்லாத அன்பு உபசரிப்பு—எனக்கும் மகிழ்ச்சி தான். ஆனால் அக்காள் அறிவார்களா? என் மனதில் இருப்பவளை என் இதயம் என்ன கண்ணாடியாலா செய்யப்பட்டு இருக்கின்றது? உள்ளே இருப்பதை வெளியே தெளிவாக காட்டிட, இருந்தாலும் அன்பாக நடந்து கொண்டேன்.

காலையில் எழுந்திருப்பது, அலுவலகம் செல்வது, மாலைவருவது, வெள்ளிக்கிழமைகளில் தில்லைக் கூத்தனின் சன்னதியில் நின்று கொண்டு அவளுக்காகப் பிரார்த்திப்பது—இப்படியாக உருண்டு விட்டது ஓராண்டு.

"Out of sight out of Mind" என்ற ஆங்கிலேய தத்துவம் அடிக்கடி என் நினைவுக்குவரும். கண் எதிரில் இல்லாதவர்கள், மனதைவிட்டு விலகிவிடுவார்கள்" இந்த ஆங்கிலேயதத்துவம் பலித்து விடக்கூடாதே; அமுதாவின் கண்களுக்கப்பால் இருக்கும் நாம் அவள் மனதில் இல்லாமல் போய்விடக்கூடாதே என்றஏக்கம் என் மனதில் குழைந்து குழைந்து வரும் நாய்க்குட்டியைப் போல சுழன்று கொண்டே இருக்கும். ஒரு கணம் இப்படியோசித்திட்ட என் மனம் அடுத்த கணம் அமுதா ஒன்றும் அவ்வளவு சபல புத்திக்

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


காரி அல்ல என்று ஆறுதல் அளித்திடும்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு சென்னை என்னை அழைத்தது—மீண்டும் அவளைப் பார்க்கிறேன். அதே முகம், அதே கண்கள், அதே நெற்றி, அள்ளிமுடித்துக் கொண்டிருக்கும் கூந்தலின் அழகில் பழய பாணியே "சித்திரப்பாவை அத்தகவு" என்பார்களே அதைப் போலவே, அவள் தோற்றத்திலும் இளமையிலும் எந்த மாறுதலையும் கண்டிட முடியவில்லை; அவளில்.

ஆனால்... அவள் அப்போதெல்லாம், ஆமாம் நாங்கள் கூடிக் குலவிட்டோமே அந்தச் சந்தர்பங்களில் அவள் அளித்திடுவாளே ஒரு பார்வை, வடித்துக் காட்டிடுமே பல மோகன வடிவங்கள், அந்தப் பார்வை, அவைகளில் நெகிழ்ந்திட்ட நெகிழ்ச்சியை, மருட்சியை மயக்கத்தை ஆர்வத்தை அன்பை ஏக்கத்தை பெற முடியவில்லை.

முற்றிலும் முரண்பட்ட—பார்வை அந்தப் பார்வையில் பனித்திடுமே காதல் உணர்வு அது வறண்டு காணப்படுகிறது. கிளர்ச்சியில்லை-எந்தவித ஏக்கத்தையும் காட்டிட மறுக்கிறது. ஆனால் அதேநேரத்தில் விரக்தி கலந்த வேதாந்தப் பார்வை அதில் தொனித்திடத்தான் செய்கிறது. அதிலிருந்து அவள் இதயம் என்னை எங்கோ எடுத்தெறிந்து விட்ட உண்மை எனக்கு விளங்குகிறது. அந்தப் பார்வையின் பொருளை உணர்கின்ற என்மனம், செயலற்ற நிலைக்குச் சென்றுவிட்டது. பேச அவளால் முடியவில்லை. ஆனால் அதே நேரத்தில் மௌனமாகவும் இருக்க விரும்பவில்லை போலும் அவள், ஆகவேதான் அவளே சொல்லுகிறாள்.

"பழைய நினைவுகள்—உங்கள் பிரிவுக்குப் பின்பு என்னை வாட்டிவிட்டது. ருசிகண்ட பூனையாகிவிட்ட எனது உணர்ச்சிகள் உங்களை நினைத்திடும் போதெல்லாம் தூண்டப்பட்டன. சுகம் இன்னது இப்படிப்பட்டதென்று எனக்குத் தெரிவிக்கப்படாமல் இருந்திருந்தால், நான் இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டு இருக்க மாட்டேன். கல்லூரிப் படிப்பு, தோழிகளின் நட்பு, இடையே உங்கள் நினைவால் என் உணர்ச்சிகள் கட்டுப்படுத்த முடியாமல்போன உண்மையை மறைத்துவிட நான் முயலவில்லை. உணர்ச்சிகள் செய்திட்ட கிளர்சிகள், இழந்துவிட்ட சுகத்தைப் புதுப்பித்துக்கொள்ளத் துடித்தன. உணர்ச்சிகள் இறை தேடின. இறையும் கிடைத்து விட்டது ஒருவரிடம்—தவறிவிட்டேன். அதையே வேறு வார்த்தைகளில் சொல்லிட வேண்டுமானால், தவறிவிட்டது என் கற்பல்ல, எனக்காகவே நீங்கள் வாழ்வீர்கள் என்ற எண்ணத்தில் இருந்து தவறிவிட்டேன். பெண்மையை இழந்துவிட்டேன். அந்தப் புதியவரும் என்மீது அன்பாகத்தான் இருந்தார். உங்களை

நினைத்த அதே நெஞ்சத்தால் தான் அவரையும் நேசித்தேன், உங்களைத் தொட்ட அதே கரத்தால்தான் அவரையும் தொட்டேன், ஆனால் அவர் இப்போது எங்கிருக்கிறார் என்ன செய்கிறார் என்பதை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

நிதானிக்காமல் செய்த தவறல்லவா? அதற்குத் தண்டனை இது தானே? குற்றம் செய்தேன்—குனிந்ததலை நிமிர முடியவில்லை—மனம் சாக்கடையாகி விட்டது.

அவளின் வெளிப்படையான ஒப்புதல் வாக்குமூலம் என்னை மிகவும் கவர்ந்து விட்டது. குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறாள்—விடுபடவும் முடியவில்லை—தொடர்ந்திட துணிவும் துல்லிமாகத் தோன்றவில்லை. மாறாக ஒருகுழப்பம் — என்ன செய்யவேண்டும் என்ற முடிவுக்கு வரமுடியாததொரு சிக்கல்—சற்று நிதானிக்கிறேன். உதயத்தை நோக்கி நான் வந்தேன். அந்த மனதை நோக்கி அவள் நிற்கிறாள்.

மீண்டும் என்னைப் பார்க்கிறாள்-வெறும்முயற்சிகளே. பழைய பார்வை அவளிடம் இல்லவே இல்லை—குற்ற உணர்ச்சியைத் தாராளமாக ஒத்துக்கொள்ளுகிறது, தண்டனையைப் பெறவும் தயாராகிவிட்டது. நானே நீதிபதியாக்கப்பட்டேன் நிதானத்தை துணைக்கழைத்துக் கொண்டு தீர யோசித்தேன். உணராமல் செய்த குற்றத்தை மன்னித்தேன்' நீதிபதியின் நிலையில் நின்று எனது திர்ப்பை வெளியிட்டேன்.

என் தீர்ப்பைக் குற்றவாளி ஏற்க மறுக்கிறாள். தண்டனைக்கு மறுபரிசீலனையும் கோரவில்லை. தான் செய்த குற்றத்திற்குத் தக்கதண்டனை கிடைத்திடவில்லை என்று எண்ணியது போலும் அவள் உள்ளம். அதற்காகவும் வாதிட முனைகிறாள்.




இளஞ் சிவப்பேறிவிட்ட அவள் கண்களில் நீர்வழிந்த வண்ணம் எண்ணங்களை சொல்லாக்குகிறாள்,

பல நற்பண்புகளை இருளில் மறைப்பதற்கு ஒரு தீச்செயல் போதும். நாம் இயற்கைக்கு மாறாக நடந்தால் அது நம்மை மன்னிப்பதில்லை. எண்ணுவது போல் பேசுவதும் நடப்பதும் உலகத்தில் மிகக் கடினமான செயலாகும். அதிகமானவர்களுக்கு காதுகள் மட்டுமே உண்டு, ஆராய்ந்தறியும் திறன் சிலருக்கு உண்டு.

கன்னிப் பெண்ணின் தொடக்கம் பரிசுத்தத்தில் இருந்துதான் தொடங்கவேண்டும். அப்போது தான் சிலகாலமாவது வாழ்க்கை அமைதியாக நடக்கும். என் வாழ்க்கையை மன்னிப்பிலே ஆரம்பித்துவைக்க முற்படுகிறீர்கள். வாழ்க்கையின் ஆரம்பகாலம் உணர்ச்சிகளின் அடிமை. ஆகவே ஆரம்பகால வாழ்க்கை வளப்போடும், வியப்போடும் ஓடும். அவ்வளவு வேகம். உணர்ச்சிப் பிடியினின்று விடுபட்டு அடுத்த நிலைக்கு வாழ்க்கை தனது காலடியை எடுத்து வைக்கும்போது எனது இழிசெயலின் சுயவடிவத்தைக் கூர்மையாகக் கண்டிட முடியும் உங்களால், சம்பரதாயங்கள், சொந்தப்பந்தம் எல்லாமே தன் பற்றை அறுத்துக்கொண்டு நம் வாழ்க்கையை அழித்துவிடும்.

காதலுக்கு இலக்கணம் வகுக்க எல்லா பெண்களாலும் முடியாது. அதை ஒரு சிலரால் மட்டுமே வகுத்துக் காட்டிட முடியும்.

உடைந்து போகக்கூடிய கண்ணாடிப் பாத்திரங்களுக்குகூட உத்தரவாதம் கேட்டும் காலம் இது, உத்திரவாதமில்லாத பொருளை வாங்க யாரும் முற்பட மாட்டார்கள். உத்தரவாதமில்லாத பொருளை வேண்டும் என்று வாங்குபவர்கள் அலட்சிய மனப்பான்மையும் அதாவது உபயோகப்படா விட்டாலும் பரவாயில்லை, சந்தர்பத்திற்குப் பயன் பட்டால் போதும் என்ற மிகச் சாதாரண எண்ணத்தில்தான் வாங்க முற்படுவார்கள்.

உத்தரவாதமிழந்து விட்ட என்னை மன்னித்துவிட்டு வாழ்க்கைக்கு துணையாக்கிக்கொள்ள விரும்புகிறீர்கள். வேடிக்கையான தீர்ப்பு மாத்திரமல்ல, என் இளமையின் மீது ஏற்பட்ட மோகத்தில் உணர்ச்சியின் அடிப்படையில் எழுந்த தீர்ப்பு.

உத்தரவாதமுள்ள எந்தப் பொருளுக்கும் உலகத்தில் கிடைக்கும் மதிப்பே தனி. அதுதான் பெண்களின் சொத்து. பெண்ணுலகம் தெரிந்து தெளிவடைய வேண்டிய பாடம்.

முன்னியுங்கள்.........

தலைகுனிந்தவாறே மெல்ல விலகிச் சென்று கொண்டே இருக்கின்றாள். சிலையாக நின்று நானும் அவளின் நாணயத்தைக் கண்டு வியந்தேன்.

# "இலங்கை நாடே! இரண்டு படாதிரு!!"

(பாவலன். அரி மதிதென்னகன்)

உலகம் தழீஇய ஒருமா நாடும்
இலங்கை நாடும் ஏற்றம் பெற்றிட
நடந்ததே! நடந்ததே! ஏனோ நடந்ததே!!
படகும் கவிழ்ந்த படிகிடப் பதுபோல்
நீர்சூழ் நாட்டில் நேர்மைக் கொலையோ!!
கார்பொழி மழையும் கனலாய்ப் பயிர்களைத்
தீய்த்திடும் தீமை தீவில் நடப்பதோ!!
வாய்மைத் தமிழ்க்குலம் வதைவதோ ஆங்கே?
தமிழ்மா நாட்டில் தலைகள் சாய்ந்திடின்
அமிழ்தமே ஆருயிர்ப் பறிப்பதாய் ஆகுமே!!
யாழ்நகர் தன்னில் அருந்தமிழ் அறிஞர்
சூழ்ந்து முழக்கின் சூழ்ச்சியோ பெருகும்!!
மூலிகை என்றும் மூச்சை நிறுத்துமோ?
ஆலம் விழுதோ அரவமாய்க் கடிக்கும்
புத்தம் பொலிநிலம் பொய்கையில் மிதக்கும்
இந்தப் பூவென ஏன்மா றியதோ?
ஓடா நீரில் ஒட்டு மாங்கனி
நாடாம் இலங்கையில் நல்லர சில்லையோ?
உ(ள்)ளங்கை நாடும் ஓநாய்க் காடாய்
விளங்கிய தெதனால்? வெறிக்கூத் தாங்கே
பதின்மரின் உயிரைப் பலிவாங் கியதேன்?
கதியிலா இனமா கன்னித் தமிழினம்?
அன்னை வடிவினில் ஆட்சிசெய் 'சிரீமா'
இன்னுயிர் குடிக்க என்ன நடந்தது?
'தான்'என இருந்த தருக்கரின் முடிவினை
'நான்'என இருப்போர் நம்பிட மாட்டார்.
எல்லாம் நானே என்றிருப் போர்க்குப்
பொல்லா முடிவே பொருந்தும் என்பதை
அன்னை 'சிரீமா' அறிவது நலமே!!
என்றும் பொறுமையாய் இருப்போர் கண்களில்
கொப்புளிக் கும்நீர் கொதிக்கும் எண்ணெயாம்!!
எப்படி என்பதை ஏய்ப்போர் அறிந்திட
நாள்சில ஆகலாம்; நடந்திடும் ஓர்நாள்!!
ஆளும் இலங்கை அரசிதை அறிக!!
'சில்'லெனத் தோற்றும் செந்தீ தமிழனே;
புல்லென இருக்கும் போர்வாள் அவனே;
பொய்கைபோல் தெரியும் பொங்கும் கடலவன்!!
நெய்போல் இருக்கும் நெருப்புக் குழம்பவன்!!
காலம் வரும்வரை தென்றல் காற்றவன்!!
காலம் வருமேல் கடும்புயல் அவனே!!
இறுமாந் திருக்கும் இலங்கை அரசிதை
வரலா றறியா வரட்டு மதியினால்
உணரா திருக்கலாம்; உவகையில் மிதக்கலாம்!!
பிணங்களைக் கண்டும் பெருமையும் படலாம்!!
நாளை அந்நாள் வரத்தான் செய்யும்;
காளையர் எழுவர்! கடமையை முடிப்பர்!!
இலங்கை நாடே! இரண்டு படாதிரு!!
புலவோர் வாழ்த்திப் புதுப்பாட் டிசைத்தே
ஏய்ப்போர் பிடியினி இலையென் றுடிடும்
வாய்ப்பினைக் கொடாதுநீ வாழ முயல்கவே!!

## 'நாட்டுப் பெண்-மாட்டுப் பெண்'

(வலசை. து. செயராமன்)

அரி:— இராமன்! நாட்டுப்பெண், மாட்டுப்பெண் என்கிறார்களே அதற்கு என்ன பொருள்? யார்யாரை அப்படிச் சொல்லுவார்கள்?

இராமன்:- நாட்டுப்பெண், மாட்டுப்பெண் என்று சொல்லுவது தவறு! நாற்றுப்பெண், மாற்றுப்பெண் என்றுதான் சொல்ல வேண்டும். நம் வீட்டு மகளை 'நாற்றுப் பெண்' என்றும், நம்வீட்டுக்கு வந்த மருமகளை மாற்றுப்பெண் என்றும் சொல்லுவார்கள்.

அரி:— ஏன் அப்படிச் சொல்லுவார்கள்?

இராமன்:- ஒரு பாத்தியில் முளைக்கும் இளம் பயிருக்கு 'நாற்றுப்பயிர்' என்பார்கள். அதையே மாற்றி வேறு வயலில் நட்டுச் செழித்தோங்க செய்வார்கள்; அதை மாற்றுப்பயிர் என்பார்கள். ஒரு வீட்டில் பிறந்து வளர்ந்த பெண் நாற்றுப் பயிராக இருக்கிறாள்; அவள் பூர்படைந்து வேறு வீட்டில் வாழப் புகுந்த பிறகு மாற்றுப் பயிராக மாறிவிடுகிறாள். அதனால்தான், தன்பெண்ணை 'நாற்றுப் பெண்' என்றும், தன் வீட்டிற்கு வந்த மணப்பெண்ணை 'மாற்றுப்பெண்' என்றும் சொல்லுவார்கள். அதுமட்டுமில்லை, கணவனின் தங்கை தமக்கைகளை நாத்தி, நாத்தூண் நங்கை என்பதும் அதன் அடிப்படையில்தான்.

அரி:— இராமன்! உண்மையிலேயே தமிழ் ஓர் உன்னதமொழி தாங்க! தமிழிலுள்ள ஒவ்வொரு சொல்லிலும் எவ்வளவு பொருள் இருக்கின்றது பார்த்தீர்களா!

தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

"அப்படியா? நல்லது. இளங்கோழிக்குஞ்சுகள் ஆட்டுக்கல், பன்றியிறைச்சி ஆகியவற்றை முறையே இங்கிலாந்து, பிரெஞ்சு, அமெரிக்க முறையில் சமைத்து—"

"அம்மாடியோ?—"

பாலு அதிர்ந்தாள். நாகரிகக்கொம்பின் உச்சி நுனியில் ஊசலாடுகிருனே ஆடலரசு என திகைத்தாள். அவளுக்குள்ளேயே ஒரு தாழ்வு மனப்பான்மையும் சுரந்தது. அதை வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

"அண்ணு, அவர் சொன்னவற்றிற்கு உடனே ஏற்பாடுசெய்."

"அப்படியே." கொக்கு மனத்திற்குள் முணு முணுத்துக் கொண்டே வெளியே போனுன்.

பாலு மனங்கனியச் சிரித்தாள்.

உலகத்து மலர்களையெல்லாம் ஒரேயிடத்தில் பூ அருவியாகப் பொழிவது போலிருந்தது ஆடலரசுக்கு!

"வால்டர்ராலே சொன்னது எவ்வளவு உண்மை பாலு!

But love is a durable fire
In the mind ever burning,
Never sick, never old, never dead,
From itself never turning.

ஆகா! நெருப்பாக வந்து என்னெஞ்சில் புகுந்து விருப்பாக வளர்ந்து வியப்பாக நிறைந்த வீனசே! எலனின் அழகு எத்தனையோ போர்க் கப்பல்களைக் கடலில் இழுத்துவந்ததாம்! கிளியோபாட்ராவின் அழகு பேரரசுகளையும் பேரரசர்களையும் பந்தாடியதாம்.

அந்த எலனை நீ துவையல் செய்து விழுங்கி விட்டாய்! அந்தக் கிளியோபாட்ராவை நீ சுக்குநீர் வைத்துக் குடித்துவிட்டாய்! "Vain has been the life of a man who has not tasted the joys of love" பாலு! ஆகவே நான் ஆளுக வாழ, வாழ்வின் பொருளை உணர பாலு! என்னுயிரே! நீதான் துணை செய்யவேண்டும். உன் அண்ணனை ஓட்டினுய்! என் வாழ்வுக்கு இன்பவழி காட்டினுய்! பாலு! பேசவே மாட்டேன் என்கிருயே!! ஏன்?"

"உங்கள் காதல் மழையில் நனையும் போது குளிரால் நடுங்குகிறேன்."

"குளிரா? உனக்கா? ஐயோ! குளிரும் பனியும் என் பாலுவின் மேனியைத் தொடலாமா? வெயிலும் வெப்பமும் என் அன்பின் மேனியில் படலாமா? என் கவர்ச்சிக் கோபுரத்தின்மீது காற்றுகூட வீசலாமா? இன்ப ஆப்பிளும் இனிமைத் திராட்சையும் அன்பு பெரிபெரியும் ஆவல் புல்புளும் நள்ளிரவு நைட்டிங் கேலும் பிரிம்ரோசு பூங்கொத்துமான பாலு! நமக்குக் கிளியோபாட்டிராவின் பள்ளியறையன்ருே வேண்டும்?"

"போதும். நிறுத்துங்கள். செங்குட்டுவன் ஏதேனும் செய்தி கூறியனுப்பினுரா?"

"உம். அதைச் சொல்லத்தானே ஓடோடி வந்தேன். வரும் ஞாயிறன்று சென்னைக்குப் பனம் பொழில் விடுதிக்குக் கட்டாயம் வரவேண்டும்."

"எனக்கு வரவே விருப்பமில்லை ஆடல்.

"செங்குட்டுவன் விரும்புகிருரே!"

"நான் பல தொல்லைகளில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். அதனுல் சில நாள்கள் எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கியிருக்க எண்ணுகிறேன்."

"முடியாது பாலு, நீ இல்லாவிட்டால் ஒன்றுமே முடியாது."

"ஆடல்! செங்குட்டுவனிடம் சொல்லுங்கள். இந்தமுறை நான் வரவில்லை, பிறகு வருகிறேன். இதை நீங்கள்தான் திறமையோடு சொல்ல வேண்டும்."

"பாலு! என் காதலின் உயிர்நாடியே! என்னை ஏமாற்ற மாட்டாயே?"

"சே. ஆடலை ஆடவிடுவேனு? நான் சிறிது வெளியேபோக வேண்டும். போய்வரும்வரை நீங்கள் இந்த ஊரைச் சுற்றிப் பார்க்கலாம். இல்லையென்ருல், அந்த அறையில் ஓய்வெடுக்கலாம்."

"இல்லை. என்னுல் ஒருநொடி சும்மாயிருக்க முடியாது. இங்கே எரையானூரில் இருக்கும் வேளாண்மைத்துறை—எண்ணெய்வித்து ஆய்வு நிலையத்தில் என் நண்பன் ஒருவன் இருக்கிருன். விதையாராய்ச்சியில் வல்லுநன். அவனைப் போய்ப் பார்த்துவிட்டுச் சாப்பாட்டுக்குச் சரியாக"

"ஒரு மணிக்கு வந்துவிடுங்கள்."

"சரி! சரி! வருகிறேன்." எனக்கூறிப் பேராசிரியர் ஆடல் அவள்கையைக் குலுக்கி வெளியேறினுன்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த பாலு, நாற்காலியில் அமர்ந்தாள். எண்ண முகில்களின் நிழல் அவள் அகத்திலும் முகத்திலும் விரவிப் பரவின. நெற்றியில் நெளிந்து மிளிர்ந்த வரிகள் அவள் உள்ளத்தில் தெறித்த எண்ண மின்னகளின் வரிவடிவங்களாகத் தோன்றி மறைந்தன.

"என்ன பேராசிரியன் இவன்! வளவள என்று உருப்போட்ட பாடத்தை வகுப்பில் ஒப்பிப்பதைப்

போல ஒப்பித்துக் கொண்டிருக்கிறுனே! என்னைக் கண்டதும் வண்ணனை செய்யவேண்டியதுதானு? ஆனல்...செங்குட்டுவன் ஏதோ காரணத்திஞல் தான் இவனை அனுப்பியிருக்கவேண்டும்? என எண்ணியவள் தெளிந்தாள்.

உடனே புகழேந்தியின் வீட்டிற்குப் புறப்பட்டாள்.

## 50

பெண், தன் வாழ்வில் நேரும் சிறு குறையையும் மிகப் பெருந்துன்பம் என எண்ணி அதையே மனத்தில் நினைந்துருகியுருகித் தாமும் நொந்து பிறரையும் துன்புறுத்துவர்.

அழுக்காறு பெண் நெஞ்சில் செய்யும் ஆட்சிக்கு எல்லையே இல்லை. கற்பனையாகவே கூடச் சிலர்மீது அழுக்காறுக் கொண்டு — அந்த அழுக்காற்றை மேன்மேலும் வளர்த்து மனத்தைப் புண்படுத்தி அல்லலுறுவது பெண்டிர் இயல்பாகும்.

வெள்ளிவீதி தனக்குள்தானே உருகி நைந்து கொண்டிருந்தாள். தன் கணவனை எவளோ பறித்துக் கொண்டாற்போல எண்ணி அவ்வெண்ண வெப்பத்தில் கனலும் நெஞ்சுணர்வின் வேக்காடு பொருமல் மனக் கண்ணீர் வடித்து மறுகினுள்.

கணவனின் ஒவ்வொரு அசைவும் அவள் பார்வையில் ஏதோ ஒரு குற்ற நடத்தையாகத் தோன்றியது.

புகழேந்தியை மணந்தது ஏமாற்றத்தையே மணந்ததாகும் என நினைந்து மனம் முரிந்து கிடந்தாள் வெள்ளிவீதி.

புகழேந்தி குளித்துவிட்டுப் புத்துடைபூண்டு தன்னறைக்குள்ளிருந்து வெளிவந்தான்.

அழகு அணிவகுப்புப்போல பாலு நேரே வீட்டினுள் வந்தாள்.

அவளழகு சுமந்த மேனியினின்றும் வீசிய நறுமணம் வீட்டினுள் அவளுக்கு முன்னே சென்று அவள் வருகையை விளம்பரம் செய்தது.

எதிர்பாராதபோது பாலு எதிரேவந்து நிற்பதைக் கண்டு திகைப்பால் விழிகள் விரிய என்ன பேசுவதென அறியாது தயங்கி நின்றுன் புகழேந்தி.

பாலுவும் திகைத்து நின்றுள்.

அடுக்களையினுள்ளிருந்து வெளிவந்த வெள்ளிவீதியும் விழிமலர்ந்து திகைத்து நோக்கினுள்.

“வணக்கம். நான் கேள்விப்பட்டது மெய்தானு? ஏங்க?” எனப் பாலு துயர் ஒலிக்கும் கிண்கிணிக் குரலால் வினவினுள்.

தன்னினைவு வரப்பெற்ற புகழேந்தி, “உம்... ஆமாம்” எனப் பெருமூச்சு விட்டப்படி கூறினுன். தந்தையின் நினைவு வந்ததும் அவன் நெஞ்சம் தாளாமல் கண்ணீர் சிந்தலானுன்.

“நன்ருக இருந்தாரே! உம்...நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். மனம் தளராதீர்கள். நான் ஊரிலே இல்லை. வந்தவுடன் கொக்கு சொன்னுன். உடனே ஓடிவந்தேன். என்ன

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவேகோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்
பட்டுகள் பிரமாதம்
நெசவே நெஞ்சையள்ளும்
குர்தாக்கள்
பெல் பாட்டம்கள்
லுங்கிகள்
சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்
எழும்பூர் :: சென்னை-8

வெளிவருகிறது!

# 'காஞ்சி'

## அறிஞர் அண்ணா நினைவு—பொங்கல் சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணாவின் படைப்புக்களுடன்

கழகத் தலைவர் கலைஞர்

கழகப் பொதுச்செயலாளர் நாவலர்

அமைச்சர் பெருமக்கள் அருந்தமிழ்ச் சான்றோர்கள்

| | |
|---|---|
| பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் | ஏ. கே. வில்வம் |
| டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் | மணிவேந்தன் |
| டாக்டர் சாலை. இளந்திரையன் | பல்லவன் |
| குருவிக்கரம்பை சண்முகம் | தமிழ்ச் சுரபி |
| அரிமதி தென்னகன் | தி. நா. அறிவுஒளி |
| இரா. கண்ணிமை | தாமரைக்கண்ணன் |
| கருமலைப் பழம்நீ | ஆத்தூர் பன்னீர்ச்செல்வம் |
| எழிற்கோவன் | |

மற்றும்

இளைய தலைமுறையின் இலட்சிய எழுத்தாளர்கள்

அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழில்மிகு மூவண்ண முகப்போடு வெளிவரவிருக்கிறது.

மேலாளர், விவரங்கட்கு:

"காஞ்சி" அலுவலகம் :: காஞ்சிபுரம்-3.


இருக்கிறது இந்த உலகத்திலே? எல்லாரும் ஒருநாள் இந்த உலகத்தைவிட்டுப் போகவேண்டியவர்கள் தானே? இதற்கிடையே ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி அலமருகிறார்கள்! நீங்கள் பெற்றோரிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறீர்கள்! இந்தக் காலத்தில் பிள்ளைகள் பெற்றோரை எங்கே மதிக்கிறார் கள்? இதை நினைக்கும்போது என்மனம் உருகிப் போகிறதுங்க" எனத்தானே வியக்கும் வண்ணம் உணர்ச்சி நாடகம் போலப் பேசினாள் பாலு.

அவள் பேச்சு, பழகியமுறை, உணர்விலே தோன்றிய நெருக்கம், நெருக்கம் எல்லாவற்றையும் 'எடைபோட்டாள்' வெள்ளிவீதி.

"உட்கார் பாலு. எனக்குக் குடும்பப் பொறுப்பே தெரியாது. அப்பாவே எல்லாவற்றையும் கவனித்து வந்தார். நான் ஒரு விருந்தினன் போலவே இது வரை வாழ்ந்து வந்தேன். இப்போது எல்லாப் பொறுப்பும் என்மீதே சுமந்து விட்டது. திணறு கிறேன். ஒன்றுமே புரியவில்லை."

"ஐயோ! உங்களைப் பார்த்தால் மனம் குழைந்து போகிறதுங்க. நீங்க குழந்தைபோல வாழ்ந்திருக் கிறீர்கள். உம்...என்ன செய்யமுடியும்? போனவர் கள் போய்விட்டார்கள்!" இனி, இருக்கிறவர்கள் ஆக வேண்டியதைப் பார்க்கவேண்டியதுதானே? கவலைப் படாதீர்கள்."

"வெள்ளிவீதி, காப்பி கொண்டுவா"

"ஆ!...உங்கள் மனைவி"ங்களா? அடேடே! நிரம்ப அழகாக இருக்கிறாங்களே! உங்களைவிட அவர்கள் நல்ல அழகுங்க. வெள்ளிவீதி! வணக்கம். என்றாள் பாலு.

வெள்ளிவீதி வெடுக்கெனத் திரும்பி அடுக்களை யினுள் சென்றுவிட்டாள். பாலுவுக்கு முகத்தில் அறைந்தது போலிருந்தது. அவள் குலையைப் பிடுங்கி நசுக்குவதுபோலத் துடித்தாள்.

புகழேந்தி அதிர்ந்தான். வீடேறி வந்தவர்களை இவ்வாறு வெறுப்பதா? அதிலும் முதன்முதல் அறிமுகம் ஆகும்போது, சொன்ன வணக்கத்திற்குக் கூட மறுமொழியாக வணக்கம் செய்யாமல் திரும் பிப் போவதா? பாலு என்ன எண்ணுவாள்?"

புகழேந்திக்குச் சீற்றம் கரைபுரண்டது. ஆனால் பொறுமை மேற்கொண்டு கடலெனப் பொங்கி வந்த சினத்தை அடக்கிக் கொண்டான்.

"பாலு, அவள் படிப்பறிவில்லாதவள். அவள் போக்கிற்காக வருந்துகிறேன். பொறுத்துக்கொள். உட்கார்." எனக் கூறிய புகழேந்தி, எழுந்து அடுக் களைக்குள் சென்றான்.

(வளரும்)

★★★★★★★★★★★★★★★★★★★★★★

## கவியில் கண்டேன்

### (துரை. வெற்றிவேலன்)

எந்தனின் இதயந் தன்னை
    எழில்வடி வான பெண்ணாள்
கொண்டனள் ஓர்நாள் அன்னாள்
    கெண்டைமீன் விழியி னாலே!
அன்றவள் பார்வை கண்டேன்
    அடுத்தவள் இமைக்கக் கண்டேன்
என்னவள் சிரம்க விழ்ந்து
    ஏக்கமுடன் நாணக் கண்டேன்!

அள்ளியே அணைத்துக் கொள்ள
    அன்பினால் துடித்தேன்! ஆனால்
கிள்ளைமொழி பேசி அன்னாள்
    கையினில் நழுவிச் சென்றாள்!
முல்லையின் சிரிப்பைச் சிந்தி
    முன்னவள் நடந்து செல்ல
எல்லையிலா இன்பங் கண்டேன்
    இனியவன் பின்னே செல்ல!

பார்த்தஅவள் பாலின் வண்ணம்
    பார்த்துமே இருக்கத் தோன்றும்!
ஓர்நாளும் வருவாள் என்றே
    உவகையால் நோக்கி நின்றேன்!
பார்த்துமே நின்றேன் ஆனால்
    பாவையைக் கண்டேன் இல்லை!
வார்த்திட்டேன் கவிதை யில்தான்
    வஞ்சியைக் கவியில் காண!

---

## வித்தகா! வாழ்க நீவீர்!

### (கவிஞர் குறிஞ்சில் தாசன்)

முத்தமிழ் நாட்டின் மக்கள்
    முறையுடன் போற்று கின்ற
வித்தகா! அண்ணா நெஞ்சில்
    விளைந்தநற் கலைஞர் ஏறே!
எத்தனை துயர்வந் தாலும்
    எதிர்ப்பினில் வெற்றி காணும்
உத்தமா! உயர்ந்தோர் ஏத்தும்
    ஒப்பிலா முதல்வ! வாழ்க!

கண்ணொளி தந்தீர்; ஏழை
    கையினில் "பட்டா" தந்தீர்!
மின்னொளி எங்கும் கண்டீர்;
    மேடையில் கவிதை ஈந்தீர்!
இன்னமும் எங்கட் கெல்லாம்
    ஏராள நன்மை ஈந்தீர்!
நின்னுடை அரசின் மேன்மை
    நினைத்திட இன்பம் பொங்கும்!

ஏட்டினில் புரட்சி கண்டீர்;
    எழுத்தினில் புதுமை கொண்டீர்!
நாட்டினர் வாட்டம் போக்க
    நல்லாட்சி நடத்து கின்றீர்!
பாட்டினில் மிளிரு கின்ற
    பொருள்போல விளங்கு கின்றீர்!
தீட்டிய கவிதை வேளே!
    தென்மொழித் தலைவா! வாழ்க!

★★★★★★★★★★★★★★★★★★★★★★

## மக்கள் மடல்

**அன்புள்ள ஆசிரியர்க்கு,**

நான் நீண்ட பல நாட்களாக "காஞ்சி" ஏட்டினை தொடர்ந்து படித்து வருகிறேன். 13—1—74 ஏட்டில் வெளிவந்த "குமுதத்தின் குருட்டுத்தனம்" சிறப்பாக இருந்தது. குமுதம் ஏட்டினை கையால் தொடுவதில்லை என்ற முடிவுக்கு நான் வந்து விட்டேன். தங்கள் ஏட்டில் எப்படியும் அண்ணனின் கட்டுரை ஒன்று இடம் பெறட்டும். கவிஞர் மணிவேந்தனின் முகப்பு கவிதை அமுதாய் இருந்தது. புலவர் பொன்னிவளவனின் குறள் விளக்கம் நன்று. அதுவும் தொடர்ந்தால் இனிமை யாக இருக்கும்.

வளர்க தங்கள் பணி!

நாமக்கல், கொ. வெள்ளைச்சாமி.
22—1—74

ஃ ஃ ஃ

**அன்புள்ள ஆசிரியர்க்கு,**

13—1—74 'காஞ்சி'யில் வெளிவந்த மணிவேந்தனின் தேனமுதம் தாராயோ? என்னும் கவிதையில் சொல்லாட்சி மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. சாதுப்புலவரின் குமுதத்தின் குருட்டுத்தனமும், வாரியிறைக்காதே சேற்றை வண்டமிழ்க்கோமேலே என்னும் கவிதையும் சிறப்பாக உள்ளன. உள்ளக் குமுறல்களின் பிரதிபலிப்பாக உள்ளன. சிறுகதைகள் (குறிப்பாக, அணைப்பு) எனக்குப் பிடிக்கவில்லை. இன்னும் தரமான சிறுகதைகளை வெளியிட வேண்டும்.

திருவனந்தபுரம், மணமல்லி.
22--1—74.

ஃ ஃ ஃ

**அன்புள்ள ஆசிரியர்க்கு,**

13—1—74 காஞ்சி பாற்சுவைக்கடலெனில் வெற்றுரையல்ல. நண்பர் கரு சின்னத்தம்பி கவிதை குருடர்களின் மனதுக்குச் சரியான அடி. பயங்கர இடி. பாவமன்னிப்புப் பத்துவைக் காட்டிலும் சரியான சொல்லோவியம் வரப்போவதில்லை. ஆயினும் குட்டிக்கதைகள் அருமை. தேர்தல்கள் நம்மை நெருங்கும் வேளையில் அண்ணனின் கடிதம் மிகவும் உதவுகிறது. தொடருக பணி! தூய்தின் வளர்க!!

காமாட்சிபுரம். ந. பாண்டுரங்கன்
22—1—74.

# நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

### குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3, 86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் (போன்: 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.